தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 79 | 4 Pages | 18.10.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 79 | 4 பக்கங்கள் | 18.10.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை**

**விளக்கம்:**
ஒருவன் தன் மனதோடு பொருந்த உண்மை பேசுவானானால் அவன் தவத்தேடு தானமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்தவன்.

## கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்களின் செயல்பாடு மிகவும் கவலை அளிக்கிறது: சி.பி.எம்.

டெல்லி, அக். 18

இந்தியா எதிர்ப்பு காலிஸ்தான் அமைப்பின் ஆதரவு பெற்ற சிறு குழுக்கள் கனடாவில் செயல்பட்டு வருகிறது. காலிஸ்தான் தலைவர் நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையிலான ராஜாங்க ரீதியிலான நட்பு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இருநாடுகளும் தூதர்களை திருப்பி அனுப்பும் நடிவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் கனடாவில் காலிஸ்தான் செயல்பாடுகள் இந்தியாவுக்கு மிகவும் கவலை அளிக்கக்கூடிய விசயம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் "கனடாவில் இந்தியாவுக்கு எதிரான காலிஸ்தான் அமைப்பின் ஒரு பகுதியினரின் செயல்பாடுகள் மிகவும் கவலை அளிக்கக்கூடிய விசயம். இது நேரடியாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பை பாதிக்கிறது. தேசிய நலனைப் பாதுகாப்பதில் இந்திய அரசு கடமைப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் முழுவதும் ஆதரவு உள்ளது.

இந்தியாவுக்கு எதிராக கனடா அரசின் பல்வேறு அதிகாரப்பூர்வ அதிகாரிகளால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை இந்திய அரசு நிராகரித்துள்ளது. லாரன்ஸ் பிஷ்னாய் கிரிமினல் கும்பலின் பங்கு உள்பட இந்த விவகாரங்களில் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை இந்திய அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுடுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 நாட்களில் இந்தியாவில் 12 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்களின் செயல்பாடு மிகவும் கவலை அளிக்கிறது: சி.பி.எம்.




மகாராஷ்டிரா, அக். 18

வெடிகுண்டு மிரட்டலால் 12 விமானங்களும் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டதால் பயணிகள் அச்சமடைந்தனர். பின்னர் இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் அனைத்தும் புரளி என்று பின்னர் தெரிய வந்தன.

வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாகசத்தீஸ்கரைசேர்ந்த 2 பேரை மும்பை போலீசார் கைது செய்துள்ளனர்.

இதில் ஒருவர் பெயர் நிர்பன் ஃபஸ்லுதீன் (33) என்றும் இன்னொரு நபர் 17 வயதான சிறுவன் என்றும் போலீசார் தெரிவித்தனர். இந்த சிறுவன் கைது செய்யப்பட்ட ஃபஸ்லுதீனின் எக்ஸ் கணக்கை ஹேக் செய்து சமூக வலைத்தளங்களில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாகவும் மும்பை விமான கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாகவும் போலீசார் தெரிவித்தனர்.

சிறார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சிறுவன் சிறார் சிறைக்கு அடைக்கப்பட்டான். வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக ஃபஸ்லுதீனிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதல்வர் வேட்பாளர் யார் என்பதை தெரிவிக்கவும்... சரத் பவாருக்கு பட்நாவிஸ் வலியுறுத்தல்



மகாராஷ்டிரா, அக். 18

மகாராஷ்டிரா மாநிலத்தில்அடுத்த மாதம் 20ந்தேதி 288 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

மகாராஷ்டிராவில் மகாயுதி, மஹா விகாஸ் அகாதி என இரண்டு பெயர்களில் மெகா கூட்டணி உள்ளன. மகாயுதி கூட்டணியில் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய மூன்று கட்சிகள் உள்ளன. மகாயுதி கூட்டணிதான் ஆட்சி அமைத்துள்ளது. ஏக்நாத் ஷிண்டே முதல்வராக இருந்து வருகிறார். அஜித் பவார் மற்றும் பா.ஜ.க.வின் பட்நாவிஸ் ஆகியோர் துணை முதல்வராக உள்ளனர்.

மகா விகாஸ் அகாதி என்ற எதிர்க்கட்சி கூட்டணியில் சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் (சரத்சந்திரா பவார்), உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா, காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகள் உள்ளன.

தற்போது முதல்வர் வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒருவேளை முதல்வர் வேட்பாளர் யார் என்று அறிவிக்காமல் தேர்தலை சந்தித்தால், தேர்தலுக்குப்பின் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் இரண்டு கூட்டணியும் முதல்வர் வேட்பாளர் யார் என்பதை அறிவித்துதான் தேர்தலை சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்போதைய முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, பட்நாவிஸ், அஜித் பவார் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது மகாயுதி கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் யார்? என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பட்நாவிஸ் "முதல் மந்திரி இங்கே அமர்ந்து இருக்கிறார். உங்களுடைய முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்று எதிர்க்கட்சிகளிடம் கேளுங்கள். முதலில் உங்களுடைய முதல்வர் வேட்பாளரை தெரிவிக்கவும். உங்களுடைய முதல்வர் வேட்பாளரை தெரிவியுங்கள் என சரத் பவாரிடம் வலியுறுத்துகிறேன்" என்றார்.

ஏக்நாத் ஷிண்டே "உயர்ந்த பதவியை பெறுவதற்கு யாரும் ஆசைப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக எங்கள் அரசாங்கம் செய்த பணிகள் எங்கள் முகம்" என்றார்.

# இணைந்து பயணிப்போம், வெற்றி காண்போம் உமர் அப்துல்லாவுக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, அக். 18

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதல் மந்திரியாக உமர் அப்துல்லா பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், முதல் மந்திரியாக பொறுப்பேற்ற உமர் அப்துல்லாவுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, முதல்வர் ஸ்டாலின்வெளியிட்டுள்ளவாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

ஜம்மு காஷ்மீர் முதல் மந்திரியாக பொறுப்பேற்றுள்ள உமர் அப்துல்லாவுக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள். ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா பதவியேற்பு நிகழ்ச்சிக்கு எனக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், தமிழ்நாட்டில் பெய்துவரும் கனமழை காரணமாக கண்காணிப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளதால், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவரான கனிமொழியை என் சார்பாகவும், கழகத்தின் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவிக்க அனுப்பி வைத்தேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தென் முனையில் உள்ள தமிழ்நாடும், வடமுனையில் உள்ள ஜம்மு காஷ்மீரமும் உரக்கக் குரலெழுப்பும் மாநில உரிமைகளை வென்றெடுக்கும் ஜனநாயகப் போராட்டத்தில் இணைந்து பயணிப்போம், வெற்றி காண்போம் என தெரிவித்துள்ளார்.

## வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி வழியாக ராமேஸ்வரத்திற்கு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்க வேண்டும்: மாவட்ட ரயில் உபயோகிப்பாளர்கள் சங்கம் கோரிக்கை

திருத்துறைப்பூண்டி, அக் 18

"பாக் ஜல சந்தியையும் மன்னார் வளைகுடாவையும் இணைக்கின்ற வகையில் அகத்தியம்பள்ளியிலிருந்து வேதாரண்யம், திருத்துறை ப்பூண்டி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி, காரைக்குடி வழியாக ராமேஸ்வரத்திற்கு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்க வேண்டும் என்று திருவாரூர் மாவட்ட ரயில் உபயோகிப்பாளர்கள்சங்கமாவட்ட தலைவர் வழக்கறிஞர் நாகராஜன் மாவட்டச் செயலாளர் எடையூர் மணிமாறன், மாவட்டதுணைதலைவர் முனைவர் துரை ராயப்பன், மாவட்டதுணைசெயலர்நல்நூலகர் ஆசைத்தம்பி ஆகியோர் தென்னக ரயில்வே பொது மேலாளர் மற்றும் திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் ஆகியோருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது இந்தியாவின் தென்கிழக்கு எல்லையாக இருக்கின்ற "வேதாரணியம் பகுதியானது பாக்ஜலசந்தி என்று பூகோளரீதியாக சிறப்பு பெயருடன் அழைக்கப்படுகின்றது.மேலும் இந்த பகுதியினை பாக் வளைகுடா என்றும் பாக் குடா என்றும் பாக் நீரினை என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றைப் போலவே ராமேஸ்வரம் பகுதியினை மன்னார் வளைகுடா என்ற சிறப்பு பெயருடன் பூகோள ரீதியாக அழைக்கப்படுகிறது. மன்னார் வளைகுடாவாக போற்றப்படுகின்ற ராமேஸ்வரத்தில் இருந்து பாக் வளைகுடாவாக இருக்கின்ற பாக் ஜலசந்தி பகுதியான வேதாரண்யம் வரை மீன்பிடித் தொழிலும், விவசாய தொழிலும், உப்பளங்களும், விலை உயர்ந்த சிலிக்கான் மண் வகைகளும், கடல்பாசி வகைகளும், பவளப்பாறைகளும், நிறைந்து இருக்கின்ற சிறப்பானதொரு சுற்றுலா வழித்தடமாக விளங்கி வருகின்றது. மேலும் பாக் ஜலசந்தி என்று அழைக்கக்கூடிய வேதாரண்யம் பகுதிகளில் இருந்து அண்டை நாடாகிய இலங்கை 18 கிலோமீட்டர் தொலைவில் அளவிலேயே அமைந்திருப்பதால் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் விளங்கி வருகின்றது. அதிக அளவிலான மீனவர்களும், நெல் உற்பத்தி செய்கின்ற விவசாய பெருமக்களும், பணப்பயிர் விளைவிக்கின்ற தோட்டக்கலை விவசாயிகளும், உப்பள தொழிலாளர்களும், இதர வர்த்தகர்களும் பாரம்பரியமாக ராமேஸ்வரத்திலிருந்து தரைவழி மார்க்கமாகவும், கடல் வழி மார்க்கமாகவும் போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த வேதாரண்யம், அகத்தியம்பள்ளிக்கு வந்து செல்வதும் மறு மார்க்கத்தில் வேதாரண்யம், அகத்தியம் பள்ளி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி, காரைக்குடி பகுதிகளில் இருந்து ராமேஸ்வரத்திற்கும் அதிக அளவில் பயணிகள் சென்று வருவது பாரம்பரியமான தொன்று தொட்ட ஒன்றாக உள்ளது. மேலும் "கோடியக்கரை" பகுதி ஆனது வரலாற்றுச் சிறப்புமிக்க ஊரகும். "பாயிண்ட் காலிமர்" என்ற சிறப்பு பெயருடன் அழைக்கப்படுகின்றது. சுதந்திரப் போராட்ட காலத்திலும் அதற்கு முந்தைய காலத்திலும் வேதாரண்யம் பகுதியானது விவசாயத்திலும் மீன்பிடி தொழிலிலும் உப்பு உற்பத்தியிலும் அயோடின் உப்பு உற்பத்தியிலும் கருவாடு உற்பத்தியிலும்,

சவுக்கு மரங்கள், புகையிலை, மல்லிகை பூ போன்ற பணப்பயிர்கள் விளைகின்ற, சிறந்து விளங்குகின்ற பகுதிகளாகும். பறவைகள் சரணாலயம், வனவிலங்கு சரணாலயம், தமிழ்நாடு அரசு வனத்துறையின் கட்டுப்பாட்டில் சுற்றுலா மையமாக திகழ்ந்து வருகின்றது. சைவ சமயத்தில் சப்த விடங்க தலங்களில் புகழ் பெற்றதலமாக வேதாரண்யம் சிவன் கோயிலும் அகத்தியம்பள்ளி அகத்தியர் கோவிலிலும் கோடியக்கரை சிவன் கோவிலும் கற்பகநாதர்குளம் சிவன் கோவில் இடும்பவனம் சிவன் கோவில் திருத்துறைப்பூண்டி சிவன் கோவில் கோவிலூர் சிவன் கோவில் முத்துப்பேட்டை தர்கா உள்ளிட்ட ஆன்மீக தலங்கள் உள்ளடக்கிய "பாக் வளைகுடா" பகுதியான முத்துப்பேட்டையில் இருக்கின்ற லகூன் தீவு ஆசியாவிலேயே மிகப்பெரிய 144 சதுர கிலோமீட்டர் அளவுள்ள அலையாத்தி காடுகளை உள்ளடக்கியது என அறிவிக்கப்பட்டுள்ளது. உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் போன்ற சுற்றுலா இடங்களும் அதிக அளவில் இருக்கின்றது. இவற்றைப் போலவே மன்னார் வளைகுடா பகுதியில் ராமேஸ்வரம் சிவன் கோவில் மிகவும் புகழ்பெற்றதாகும். அங்குள்ள ஆன்மீக பக்தர்களும், வணிர்களும், மீனவர்களும் அதிக அளவில் ராமேஸ்வரத்திலிருந்து வேதாரணியம் பகுதிகளுக்கு தினமும் வந்து செல்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த ரயில் வழித்தடம் ஆகவும் உள்ளது. ரயில்வே துறைக்கு அதிக வருமானத்தை ஈட்டி தரக்கூடிய வழித்தடமாக விளங்குகின்ற அகத்தியம்பள்ளி, வேதாரணியம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி, காரைக்குடி, ராமநாதபுரம், ராமேஸ்வரம் வழித்தடமானது ரயில்வே துறைக்கு அதிக அளவில் வருமானத்தை ஈட்டி தரக்கூடிய ரயில் வழித்தடமாகவும் இருப்பதாலும் மேலும் இந்தியாவிலேயே வரலாற்றுச் சிறப்புமிக்க ராமேஸ்வரம் மண்டபத்தை இணைக்கக்கூடிய பாம்பன் பாலம் ஆனது இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலமாக கட்டப்பட்டு பணிகள் முழுவதும் நிறைவடைந்த நிலையில் வருகின்ற அக்டோபர் மாதம் திறப்பு விழா நடைபெற உள்ளது. இப்பகுதியில் கப்பல் போக்குவரத்தையும் ரயில் போக்குவரத்தையும் தடைபடாமல் பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பாம்பன் பாலமானது மக்களின் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. எனவே இதுவரை ராமேஸ்வரத்திலிருந்து சென்னை மற்றும் வடமாநிலங்களுக்கு சென்று வந்த ரயில் போக்குவரத்து நீண்ட வருடங்களாக தடைப்பட்டுள்ளது. அவற்றை நீக்கும் விதமாக வரலாற்று ரீதியாக பாக் ஜலசந்தி என்று அழைக்கக்கூடிய பாக் வளைகுடாவையும் புகழ்பெற்ற மன்னார் வளைகுடாவையும் இணைக்கின்ற வகையில் பொதுமக்களின் நலன் கருதி அகத்தியம்பள்ளியில் இருந்து ராமேஸ்வரத்திற்கு புதிய எக்ஸ்பிரஸ் ரயில் விட வேண்டும் என்று அந்த கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளது.




## வானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

விழுப்புரம், அக். 18

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், வானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சியில், ஏ.ஜி.நகர் பகுதியில், வீடுதோறும் குடிநீர் பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்படும் குடிநீர் சுகாதாரமான முறையில் நாள்தோறும் வழங்கப்படுகிறதா என்பது குறித்து பொது மக்களின் வீட்டிற்கே சென்று கேட்டறியப்பட்டது. பெரும்பாக்கம் பகுதியில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், ரூ.3.53/ இலட்சம் மதிப்பீட்டில் பயனாளி வீடு கட்டி வருவதை நேரில் பார்வையிட்டு, பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், பணியினை விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.



அதேபகுதியில், அயோத்திதாசர் பண்டிதர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.20.00/ இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டதுடன், கட்டுமானப் பணிக்கு பயன்படுத்தும் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், பணிகளை விரைந்து முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பெரும்பாக்கம் மாரியம்மன் கோவில் தெருவில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், ரூ.3.53/ இலட்சம் மதிப்பீட்டில் பயனாளி வீடு கட்டி வருவதை நேரில் பார்வையிட்டு, பணியினை விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், அதேபகுதியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.9.10/ இலட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்தார்.

ஆய்வின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் தேவதாஸ், வானூர் வருவாய் வட்டாட்சியர் நாராயண மூர்த்தி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருவண்ணாமலையில் பவுர்ணமியையொட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்

திருவண்ணாமலை, அக். 18

திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் ஏராளமான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். இந்த ஆண்டு புரட்டாசி மாதத்தின் முதல் நாளன்று பவுர்ணமி வந்தது. தொடர்ந்து 2வது பவுர்ணமியும் இந்த புரட்டாசி மாதத்தின் நிறைவையொட்டி வந்துள்ளது. அதாவது நேற்று இரவு 8 மணியளவில் பவுர்ணமி தொடங்கி புரட்டாசி மாதத்தின்நிறைவுநாளான 31ந் தேதியான இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 5.38 மணியளவில் நிறைவடைகின்றது.



இந்த நிலையில் திருவண்ணாமலையில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்றும், இன்றும் திருவண்ணாமலைக்கு ஆரஞ்சு அலர்ட் கொடுக்கப்பட்டு இருந்தது. இதனால் கிரிவலம் வருவதை தவிர்க்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இருப்பினும் நேற்று மாலையில் இருந்து திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் செல்ல பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்தனர். இரவு 8 மணிக்கு மேல் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. இருப்பினும் மழையின் காரணத்தினால் வழக்கத்தை விட கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் குறைந்தே காணப்பட்டது. இரவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.

மேலும் கோவிலில் கிரிவலம் செல்ல வந்த பக்தர்கள் ஏராளமானோர் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் விரைந்து சாமி தரிசனம் செய்ய கோவில் நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. போலீசார் திருவண்ணாமலை நகரம் மற்றும் கிரிவலப்பாதையில் தொடர்ந்து ரோந்து பணியிலும், போக்குவரத்தை சீர் செய்யும் பணியிலும் ஈடுபட்டனர்.

# தீபாவளி சீட்டு பணத்தால் வெடித்த சண்டை.. தந்தையின் கழுத்தை அறுத்து கொன்ற மகன் போலீசில் சரண்

மதுரை, அக்.18

மதுரை வில்லாபுரம் பகுதியில் சேர்ந்தவர் லோகநாதன் (வயது 60). இவர் அதே பகுதியில் உள்ள ஒரு அப்பள கம்பெனியில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். லோகநாதனுக்கு கார்த்திக் என்ற ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். அவர்கள் அனைவரும் கூட்டுக்குடித்தனமாக வசித்து வந்தனர்.





சமீபத்தில் கார்த்திக் தனது மனைவியுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் அவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். கார்த்திக் தீபாவளி சீட்டு பிடித்து வந்தார். இதற்காகஅப்பகுதியைசேர்ந்த ஏராளமானோரிடம் பணம் வசூலித்து வங்கிக் கணக்கில் சேமித்து வைத்திருந்தார். அதனை தீபாவளி பண்டிகையின் பணம் வசூலித்தவர்களுக்கு பலகாரம், பரிசுப்பொருள் மற்றும் வட்டியுடன் கொடுக்க திட்டமிட்டு இருந்தார்.

இதற்கிடையே கடந்த சில மாதங்களுக்கு முன்பு தீபாவளி சீட்டு பணத்தில் ரூ.3 லட்சத்தை மகன் கார்த்திக்கிடம் இருந்து அவரது தந்தை லோகநாதன் வாங்கியிருந்தார். தீபாவளிக்கு முன்னதாக அந்த பணத்தை திருப்பி தந்துவிடுவதாகவும் அவர் உறுதியளித்து இருந்தார். ஆனால் தீபாவளிக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் தற்போது வரை லோகநாதன் ரூ.3 லட்சத்தை திருப்பித்தரவில்லை.

இதுதொடர்பாக தந்தைக்கும் மகனுக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் மற்றும் தகராறு ஏற்பட்டு வந்தது. நேற்று இரவு அந்த பணத்தை கார்த்திக் தந்தையிடம் கேட்டபோது மீண்டும் தகராறு உருவானது. இதில்ஆத்திரம்அடைந்த கார்த்திக், தந்தை என்றும் பாராமல் வீட்டில் இருந்த கத்தியை எடுத்து லோகநாதனை கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்தார்.

பின்னர் அவர் நேராக அவனியாபுரம் போலீஸ் நிலையத்திற்கு சென்று சரண் அடைந்தார். இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற போலீசார் கொலையுண்ட லோகநாதன் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து கார்த்திக்கிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. தீபாவளி சீட்டு பணத்தை பெற்றுக்கொண்டு திருப்பித்தராத தந்தையை மகனே கழுத்தை அறுத்துக்கொலை செய்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# சென்னையில் மட்டும் அதிக மழை பெய்வது ஏன்?

சென்னை, அக். 18

மகிழ்ச்சியோடு கொண்டாடி வரவேற்க வேண்டிய மழையை, சென்னை மக்கள் மட்டும் அச்சத்துடன் எதிர்கொள்கின்றனர். ஏனென்றால் மற்ற மாவட்டங்களை விட சென்னையில் தான் மழை கொட்டி தீர்க்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் மழையை பற்றி முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மழை என்பது ஒரு இயற்கை சுழற்சியால் நடக்கிறது. கடல், ஆறு, ஏரிபோன்றநீர்நிலைகளில் இருந்து நீர் சூரியனின் வெப்பத்தால் ஆவியாகி வளிமண்டலத்தில் சேருகிறது. அங்கு குளிர்ந்து நீர்த்துளிகளாக மாறி மேகங்களை உருவாக்குகிறது. மேகங்கள் கனமாக மாறி மழையாக விழுகின்றன.

மழை உருவாகும் வானிலைச் சூழல்களையும், காற்று இயக்கங்களையும் பொறுத்து பொதுவாக 9 பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அதில் முதலாவது 'பருவ மழை'. அதாவது ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவ மழையும் மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்கு பருவ மழையும் பெய்யும் காலங்களாகும். இந்தியாவில் இதுதான் முக்கிய மழைக்காலம் ஆகும். இந்த மழையை நம்பி தான் விவசாய பணிகள் எல்லாம் நடக்கின்றன.

2வது இடைமழை. அதாவது வெப்பமான இடங்களில் காற்று மேலே சென்று குளிர்ந்து நீர்த்துளிகளாக மாறும் போது உருவாகும் மழை. இது பொதுவாக வெப்ப மண்டலங்களில், கோடை காலங்களில் மாலையில் நிகழும். 3வது மலை மழை. அதாவது மலைகளின் அடிப்பகுதியில் உள்ள காற்று மேலே சென்று குளிர்வதால் மழையாக மாறும் மழை. இது மலையோரப் பகுதிகளில் அதிகமாக காணப்படும்.

4வது இடிமுழக்க மழை. மின்னல், இடியுடன் கூடிய, வலுவான மழையாகும். இது கடுமையான வானிலைச் செயல்பாடுகளால் உருவாகும், பொதுவாக வெப்பமான பகுதிகளில் அல்லது பருவநிலை மாற்றங்கள் அதிகமாக உள்ள இடங்களில் இது அடிக்கடி ஏற்படுகிறது. 5வது, சுழல்புயல் மழை. இது புயலினால் ஏற்படும் மழை. சுழல்புயல் என்பது கடலில் உருவாகி, கடல் நீர் மேலே உயர்ந்து, காற்றழுத்தம் குறைவதால் உண்டாகும் ஒரு பெரிய நிகழ்வு. இதன் காரணமாக பலமுறை திடீர்மழை, பெரும்காற்று மற்றும் கடலோரப் பகுதிகளில் அதிக மழை பொழியும்.

6வது, இடையிலான மழை. இது வெப்பமான காற்று மற்றும் குளிர்காற்று சந்திக்கும் பகுதியில் உருவாகும் மழை. இது மித வெப்ப மண்டலங்களில் காணப்படும். 7வது சிறு காற்று மழை. இது மெல்லிய, சிறிய நீர்த்துளிகள் மெதுவாக மழையாக விழும் ஒரு மழை வகையாகும். இந்த மழையில் நீர்த்துளிகள் பரவலாக கிடைக்கின்றன, ஆனால் அவைமிகச்சிறியதாகவும், மெதுவாகவும் இருக்கும். இது பொதுவாக வெப்ப நிலை குறைவாக இருக்கும் நாட்களில் அல்லது மிதமான குளிர்ந்த காற்று மண்டலங்களின் மூலம் கிடைக்கும்.

8வது நிச்சயமில்லாத மழை. இது பருவம் இல்லாத நேரங்களில் திடீரென்று பெய்யும் மழை. ஒன்பதாவது திடீர் மழை. இது மிக குறுகிய நேரத்தில் அதிகமான நீர் விழும் மழை, இது பேரழிவுகளை உருவாக்கும்.

இந்த மழை வகைகளில் மிகவும் பேராபத்தானது சுழல்புயல் மழை மற்றும் திடீர் மழை தான். அதில் சென்னையில் இதற்கு முன்பும், இப்போதும் பெய்வது சுழல்புயல் மழை தான். இது கடலில் ஏற்படும் புயலால் அதிகளவு மழை பொழிவு இருக்கிறது. திடீர் மழை என்பது வயநாட்டில் பாதிப்பினை ஏற்படுத்திய மழை தான்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொரு முறையும் வங்கக்கடலில் ஏற்படும்சுழல்புயல்மழையால் பாதிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் கடற்கரைகளை கொண்டுள்ளன. அதில் சென்னை உள்பட 13 மாவட்டங்கள் வங்கக் கடல் பகுதியை ஒட்டியுள்ள மாவட்டங்கள் ஆகும். கன்னியாகுமரி மட்டும் வங்கக்கடல், இந்திய பெருங்கடல் மற்றும் அரபிக் கடலோரங்களை உள்ளடக்கி உள்ளது.

வங்கக்கடலில் உருவாகும் காற்றழுத்த தாழ்வு நிலை புயலாக உருவாகி, இயற்கையாகவே சென்னை மற்றும் ஆந்திரா, ஒடிசா ஆகிய பகுதிகளில் தான் கரையை கடக்கிறது. இதுதான் சென்னையில் அதிக மழை பொழிவுக்கு முக்கிய காரணம்.

கடந்த காலங்களில் வங்கக்கடலில் உருவாகும் புயல்கள் ஆந்திரா மற்றும் ஒடிசாவில் தான் கரையை கடந்து வந்தன. ஆனால் பருவ நிலை மாற்றத்தால் கடந்த 20 ஆண்டுகளாக சென்னையிலும் கரையை கடக்கிறது. அதனால் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் மழை கொட்டி தீர்க்கிறது. பொதுவாக புயல் கரையை கடக்கும்போது அந்த நகரங்களில் 10 முதல் 30 செ.மீட்டர் கூட மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் மழையால் ஏற்படும் பாதிப்பு மற்ற மாவட்டங்களிலும் எதிரொலிக்கிறது. அதே வேளையில் பிற மாவட்டங்களில் இதே மழை பெய்தாலும், அவை கவனம்ஈர்க்கப்படுவதில்லை.

# வீராணம் ஏரி 46 அடியை எட்டியது



கடலூர், அக். 18

வடகிழக்கு பருவ மழை பெய்து வருவதால் கல்லணையில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு கீழணைக்கு தண்ணீர்திறக்கப்பட்டுள்ளது.

இதனால் கீழணையின் மொத்த நீர்மட்டமான 9 அடியில் தற்போது அணை 8.5 அடியை எட்டியது. தொடர்ந்து அணைக்கு தண்ணீர் வருவதாலும், தொடர் மழை காரணமாகவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழணையில் இருந்து கொள்ளிடம் ஆற்றில் வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் தற்போது கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனவே வெள்ள பாதிப்பு ஏற்படாமல் இருக்க கொள்ளிடம் கரையோரம் வசிக்கும் கிராம மக்கள் ஆற்றில் இறங்கவோ, குளிக்கவோ, மீன்பிடிக்கவோ கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது இந்த நிலையில் கொள்ளிடம் ஆற்றில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரை சேமிக்கும் வகையில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் வீராணம் ஏரியில் தண்ணீரை சேமித்து வருகின்றனர்.

வீராணம் ஏரியில் 47.5 அடி அளவிற்கு தண்ணீர் இருப்பு வைத்துக் கொள்ளலாம். அதன்படி ஏற்கனவே 44 அடி தண்ணீர் இருந்து வந்த நிலையில் கொள்ளிடம் ஆற்றில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரில் வீராணம் ஏரிக்கு 2 அடி தண்ணீர் நிரப்பி தற்போது 46 அடி தண்ணீர் கொள்ளளவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் வீராணம் ஏரியிலிருந்து வடவாறு வழியாக சேத்தியாத்தோப்பு அணைக்கு தண்ணீர் அனுப்பப்பட்டு தற்போது 7.5 அடி முழு கொள்ளளவு எட்டப்பட்டு உள்ளது.

இதன் மூலம் சேத்தியாதோப்பு அணையில் இருந்து 3வாய்க்கால் வழியாக பரங்கிப்பேட்டை பகுதிக்கு தண்ணீர் அனுப்பப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அந்த பகுதியில் விவசாய பணிகளுக்கு தண்ணீர் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும் கடலூர் மாவட்டம் முழுவதும் தொடர்மழை காரணமாக ஆறுகள், ஏரிகள் போன்றவற்றை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழக அரசின் நடவடிக்கையால் 'வெள்ளச்சேரி' வேளச்சேரியாக மாறி உள்ளது அமைச்சர் கே.என்.நேரு

சென்னை, அக். 18

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் வளாகத்தில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் அதிகனமழையிலும் பெரிய பாதிப்பு இல்லை.

★ தமிழக அரசின் நடவடிக்கையால் தண்ணீர் தேங்காமல் வெள்ளச்சேரி வேளச்சேரியாக மாறி உள்ளது.



★ கடந்த ஆண்டு மழையின் போது ஏற்பட்ட பாதிப்பால் பாடம் கற்று இந்தாண்டு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ சென்னையில் நேற்று ஒரே நாளில் 17 முதல் 20 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

★ அதிகனமழை பெய்த போதிலும் சென்னையில் 4 மணி நேரத்தில் மழைநீர் வடிந்துள்ளது.

★ அதிமுக ஆட்சியில் அடையாற்றில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

★ மழைநீர் வடிகால் பணிகளில் சில அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்டாலும் அதனை நிறைவு செய்தது திமுக அரசுதான்.

★ பல இடங்களில் நான் ஆய்வு செய்தேன் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை. அதிமுக வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறது.

★ இரவில் இருந்த மழைநீர் காலையில் வடிந்த ஆதங்கத்தில் அதிமுகவினர் உள்ளனர்.

★ தமிழக அரசின் பணியைமக்களேபாராட்டுகின்றனர் என்று அவர் கூறினார்.

# இளைஞர்களிடையே பக்தி குறைவால் தமிழகத்திற்கு பருவம் தவறிய மழை மதுரை ஆதீனம்



மதுரை, அக். 18

வீரபாண்டிய கட்டபொம்மனின் 225வது நினைவு நாளை முன்னிட்டு மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மதுரை ஆதீனம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இன்றைய தலைமுறைகள் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்த வேண்டும். தொடர்ந்து இளைஞர்களுக்கு அரசு விடுதலைப் போராட்ட தியாகிகளை நினைவு கூறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து மதுரை ஆதீனம் சார்பாக விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உரிய மரியாதை செலுத்தி வருகிறேன். அவர்கள் இல்லை என்றால் நான் இன்று இல்லை. தமிழகத்தில் இன்றைக்கு பருவம் தவறிய மழைக்கு இளைஞர்களிடையே பக்தி குறைவாக இருப்பது தான் காரணம். கோவில் நிலங்களில் குத்தகைதாரர்கள் குத்தகை தொகையை செலுத்துவதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சி விமான நிலையத்தில் அனுமதியின்றி கடத்தி வந்த 129 சிகரெட் பண்டல்கள் பறிமுதல்

கே.கே.நகர், அக். 18

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து உள்நாட்டு மற்றும்வெளிநாட்டுவிமான சேவைகள் பெருமளவு இயக்கப்பட்டு வருகிறது. இந்த விமான சேவைகளில் பயணிகள் வருகை மற்றும் கார்கோ சேவையும் அதிகரித்துள்ள அதேவேளை தங்கம், போதைப்பொருட்கள், வெளிநாட்டு கரன்சிகள் உள்ளிட்டவைகள் கடத்தல் சம்பவமும் அரங்கேறி வருகிறது.




இதனிடையே தாய்லாந்து தலைநகர் பாங்காக்கிலிருந்து ஏர்ஏசியா விமானம், திருச்சி விமான நிலையம் வந்தது இந்த விமானத்தில் பயணம் செய்த பயணி ஒருவர் கொண்டு வந்த உடமைகளை சோதனை செய்தபோது அவர் தகுந்த ஆவணங்களின்றி எடுத்துவந்த ரூ.2 லட்சத்து 58 ஆயிரம் மதிப்பிலான 129 பண்டல் சிகரெட்டுகளைசுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தடை செய்யப்பட்ட சிகரெட் வகைகளை விமானத்தில் கடத்தி வந்ததை தொடர்ந்து அந்த பயணியை கைது செய்த சுங்கத்துறை அதிகாரிகள் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புது காதல் ஜோடி மாதிரி தமிழக அரசும் ஆளுநரும் இருக்காங்க: செல்லூர் ராஜு தாக்கு

மதுரை, அக். 18

வீரபாண்டிய கட்டபொம்மனின் 225வது நினைவு நாளை முன்னிட்டு மதுரை பெரியார் பேருந்துநிலையம்அருகே உள்ள கட்டபொம்மன் சிலைக்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதையடுத்து, செய்தியாளர்களை சந்தித்த செல்லூர் ராஜு கூறியதாவது:



அ.தி.மு.க. ஆட்சியில் பருவ மழைகளையும் புயல்களையும் சிறப்பாக எதிர்கொண்டு மக்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்தோம். ஆனால் தி.மு.க. அரசு மக்களுக்கு எதையும் செய்யவில்லை.

மழை நேரத்தில் முதல்வர் ஸ்டாலினும், அவரது மகன் உதயநிதி ஸ்டாலினும் போட்டோ சூட் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

தி.மு.க. அரசும், அமைச்சர்களும் கமிஷன், கலெக்ஷன் மட்டுமே பார்க்கிறார்கள். மக்களை பார்ப்பதில்லை.

மழையால் பாதிக்கப்பட்ட தமிழக மக்கள் வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு சரியான பதிலடி கொடுப்பார்கள். அமைச்சர் மூர்த்தி கூட மதுரையில் அவர் தொகுதியில் தான் ஆய்வு செய்கிறார்.

புது காதலன், புது காதலி போல தமிழக அரசும், ஆளுநர் உள்ளனர். ஆளுநர் அளிக்கும் தேநீர் விருந்தில் கலந்துகொள்ள மாட்டோம் என ஆளுநருக்கு எதிராக செயல்பட்ட தி.மு.க, தற்போது ஆளுநரோடு இணக்கமாக இருக்கிறார்கள்.

முதல்வர் ஸ்டாலின் திடீரென டெல்லிக்கு செல்கிறார், பிரதமரை சந்திக்கிறார். மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்குகிறார்கள் ஏதோ தேன்நிலவு போல நடக்கிறது.

ஆளுநர் எப்போதும் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டி மக்களின் குறைகளை எடுத்துச் சொல்வார். ஆனால் ஆளுநர் தற்போது மாறி இருக்கிறார் என தெரிவித்தார்.

சென்னை மழையை முன்னிட்டு தமிழக அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை பணிகளை ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று பாராட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டில் பதுக்கிய ரூ.50 கோடி மதிப்புள்ள 300 கிலோ போதைப்பொருள் பறிமுதல்



தூத்துக்குடி, அக். 18

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கஞ்சா மற்றும் பீடி இலைகள், விரலி மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் சட்ட விரோதமாக கடத்தி செல்லப்படுவது அடிக்கடி நடந்து வருகிறது.

இதைத்தடுக்க மாவட்டம் முழுவதும் கடலோர பகுதிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் தூத்துக்குடி முறப்பநாடு பகுதியை சேர்ந்த துரை என்பவரது வீட்டில் போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கடலோர பாதுகாப்பு குழும போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் இன்ஸ்பெக்டர் பேச்சிமுத்து தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து சென்று துரை வீட்டில் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அவரது வீட்டில் 3 கிலோ கிரிஸ்டல் மெத்தமைட்டல் என்ற ஐஸ் போதைப்பொருளும், சாரஸ் என்ற போதைப்பொருள் 300 கிலோவும் பறிமுதல் செய்யப்பட்டது. இவற்றின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.50 கோடி என கூறப்படுகிறது. இவற்றை பறிமுதல் செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விக்கிரவாண்டியில் விஜய் கட்சி மாநாடு போலீசாரின் 5 கேள்விகளுக்கு சில தினங்களில் பதிலளிக்க முடிவு



சென்னை, அக். 18

விஜய்யின் தமிழக வெற்றிக்கழக முதல் அரசியல் மாநாடு வருகிற 27ந்தேதி விக்கிரவாண்டி அருகே உள்ள வி. சாலை என்ற இடத்தில் நடைபெற இருக்கிறது.

மாநாடுக்கு 33 நிபந்தனைகளை போலீசார் விதித்ததுடன் அதில் 17 நிபந்தனைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் போலீசார் அனுமதி அளித்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த 4ந்தேதி மாநாட்டு பணிகள் பூஜையுடன் தொடங்கியது. மேடை மற்றும் வாகன நிறுத்தம், உணவுக் கூடங்கள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. 85 ஏக்கர் நிலப்பரப்பில் நடந்து வரும் மாநாடு பணிகளை கட்சி பொதுச்செயலாளர் அங்கு தங்கி இருந்து மாநாடு வளாகம் முழுவதையும் மோட்டார் சைக்கிளில் சென்று பார்வையிட்டு வருகிறார். மாநாடு பணிக்காக 27 குழுக்களை அமைத்து விஜய் உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்பு பணிகளில் போலீசாருடன் இணைந்து 10 ஆயிரம் தன்னார்வலர்கள் ஈடுபட உள்ளனர். இந்நிலையில் மாநாடு தொடர்பாக போலீசார் மீண்டும் 5 கேள்விகளை கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

அதில் 27ந்தேதி மாநாடு நடைபெறும் போது மழை பெய்தால் லட்சக்கணக்கில் வரும் தொண்டர்களுக்கு என்ன ஏற்பாடு செய்துள்ளீர்கள்? வாகன நிறுத்தம் வரைபடங்கள் உள்பட 5 கேள்விகளை மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக போலீசாருக்கு அளிக்க வேண்டும் என நோட்டீசில் கூறியுள்ளனர்.

போலீசார் கேட்ட 5 கேள்விகளை தொடர்ந்து விஜய் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். போலீசார் கேட்ட 5 கேள்விகளுக்கும் கட்சி சார்பில் பதில்கள் தயாராகி வருகிறது. இன்னும் சில தினங்களில் 5 கேள்விகளுக்கும் கட்சி சார்பில் பதில் அளிக்கப்பட இருக்கிறது.

மாநாட்டு பந்தலை சுற்றிலும் அவசர சிகிச்சைக்காக மருத்துவக் குழுவினர் ஈடுபட உள்ளனர். மருத்துவ பணியில் 150 டாக்டர்கள், 150 நர்சுகள் பணிபுரிய இருக்கின்றனர். 15 ஆம்புலன்ஸ்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இந்நிலையில் மருத்துவக் குழுவினர் நேற்று மாநாடு பந்தலை பார்வையிட்டனர்.

மருத்துவ முகாம் அமைக்கப்பட இருக்கும் இடங்கள் பற்றி கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

# திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தசஷ்டி விழா நவம்பர் 2ந்தேதி தொடங்குகிறது



திருப்பரங்குன்றம், அக். 18

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் கந்தசஷ்டி விழா வருகிற நவம்பர் 2ந்தேதி காப்புக் கட்டுதலுடன் நடைபெற உள்ளதையொட்டி பக்தர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசனைக் கூட்டம் அறங்காவலர் குழு தலைவர் சத்யபிரியா தலைமையில் நேற்று நடைபெற்றது.

முருகப்பெருமானின் முதலாம் படை வீடான திருப்பரங்குன்றத்தில் ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் கந்தசஷ்டி விழா 7 நாட்கள் கொண்டாடப்படுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான விழா வருகின்ற நவம்பர் 2ந்தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்குகிறது. விழாவினை முன்னிட்டு அன்றைய தினம் அதிகாலையில் அனுக்கை பூஜை தொடங்கி யாகசாலை பூஜைகள் நடைபெற்று, உற்சவர் சன்னதியில் உற்சவர் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை, சண்முகர் சன்னதியில் சண்முகர் வள்ளி, தெய்வானை, உற்சவ நம்பியார்க்கும் காப்புக்கட்டும் நிகழ்ச்சி நடைபெறும்.

தொடர்ந்து கோவிலில் தங்கி விரதம் இருக்கும் பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். விழாவினை முன்னிட்டு தினமும் பகல் 11 மணிக்கும், மாலை 6 மணிக்கும் சண்முகார்ச்சனை நடைபெறும். சண்முகர் தினமும் வெள்ளை அலங்காரம், பச்சை அலங்காரம், மயில் மீது அமர்ந்த அலங்காரம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அலங்காரங்களின் எழுந்தளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

இதே போல தினமும் உற்சவர் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானையுடன் பல்வேறு சிறப்பு அலங்காரங்களில் தந்த தொட்டி விடையாத்தி சப்பரத்தில் மாலையில் எழுந்தருளி கோவில் ஆஸ்தான மண்டபத்தை 6 முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். விழாவின் முக்கிய நிகழ்வான வேல் வாங்குதல் வருகின்ற நவம்பர் 6ந்தேதியும், சிகர நிகழ்ச்சியாக 7ந்தேதி சொக்கநாதர் கோவில் வாசல் முன்பு சூரசம்ஹாரமும், 8ந்தேதி காலை தேரோட்டமும் மாலையில் சுவாமிக்கு பாவாடை தரிசனம் மற்றும் மூலவர் தங்க கவச அலங்காரத்திலும் பக்தர்களுக்கு அருள் அளிப்பார்.

விழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ப.சத்யப்பிரியா, அறங்காவலர்கள் வ.சண்முகசுந்தரம், பொம்மத்தேவன், மணி செல்வம், ராமையா, கோவில் துணை ஆணையர் சூரிய நாராயணன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# சென்னையில் 16 லட்சம் லிட்டர் ஆவின் பால் சப்ளை

சென்னை, அக். 18

சென்னையில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் பொதுமக்கள் பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அதிகமாக வாங்கி குவித்தனர். இதனால் மளிகை கடைகள், பெட்டிக்கடைகளில் கூட்டம் அலைமோதியது.

ஆவின் பார்லர், விற்பனை மையங்களில் நீண்ட வரிசையில் நின்று பால் வாங்கி சென்றனர். வழக்கமாக வாங்கும் அளவை விட ஒவ்வொருவரும் கூடுதலாக பால் வாங்கியதால் கடைகளில் உடனே விற்று தீர்ந்தன.

ஆவின் பால் மட்டுமல்லாமல் தனியார் பால் பாக்கெட்டுகளுக்கும் கிராக்கி ஏற்பட்டது.

சென்னையில் ஆவின் பால் தினமும் 14.5 லட்சம் லிட்டர் வினியோகிக்கப்படுவது வழக்கம். கனமழை எச்சரிக்கை, விடுமுறை விடப்பட்டதால் திடீர் தேவை அதிகரித்தது. இதனால் கூடுதலாக 1.5 லட்சம் லிட்டர் வினியோகிக்கப்படுகிறது.

2 நாட்களாக தினமும் 16 லட்சம் லிட்டர் ஆவின் பால் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் வினியோகிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஆவின் அதிகாரி ஒருவர் கூறுகையில், பாலுக்கு ஏற்பட்டுள்ள திடீர் தேவையின் அடிப்படையில் வெளி மாவட்டங்களில் இருந்து கூடுதலாக பால் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்படுகிறது.

5 பாக்கெட்டுகள் வரை ஆவின் பார்லர்களில் கொடுக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதற்கு மேல் மொத்தமாக கேட்டால் கொடுக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவின் பால் தட்டுப்பாடு இல்லாமல் எல்லா பகுதிகளுக்கும் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. ஆவின் பால் வினியோகத்தில் எந்த பாதிப்பும் இல்லை.

அம்பத்தூர் பால் பண்ணையில் மழை நீர் தேங்கியது. அவற்றை உடனே வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

# வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் வீரம் செறிந்த வரலாற்று பக்கங்களில் எந்நாளும் ஒளிவீசும் முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக். 18

புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தமிழ்நாட்டில் தோன்றிய புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாள்! அந்நியரின் ஆதிக்கம் பொறுக்காமல், நெஞ்சை நிமிர்த்திப் போரிட்ட அவரது புகழ், தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில் எந்நாளும் ஒளிவீசும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதில் கூறியுள்ளார்.

# டி.என்.பி.எஸ்.சி. மூலம் 3.5 லட்சம் காலிபணியிடங்களை நிரப்ப வேண்டும்: பாலு வலியுறுத்தல்




சென்னை, அக். 18

பா.ம.க. செய்தி தொடர்பாளர் பாலு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசுத் துறைகளில் நான்காம் தொகுதி பணியிடங்கள் லட்சக்கணக்கில் காலியாக இருக்கும் நிலையில், அப்பணிக்காக டி.என்.பி.எஸ்.சி நடத்திய போட்டித்தேர்வுகளின் மூலம் நிரப்பப்படவுள்ள இடங்களின் எண்ணிக்கையை 8,932லிருந்து 15 ஆயிரமாக உயர்த்த வேண்டும்.

டி.என்.பி.எஸ்.சி தேர்வுகளில் இப்போதும் முறைகேடுகள் தொடர்கின்றன. அவை குறித்த அனைத்து விவரங்களும் டி.என்.பி.எஸ்.சி தேர்வு எழுதுவோருக்குத் தெரியும். அவற்றைக் களைய வேண்டும் என்று நினைத்தால், ஊடகங்கள் முன்னிலையில் டி.என்.பி.எஸ்.சி தேர்வர்களிடம் இதுகுறித்து கருத்துக் கேட்கலாம். அதற்கு அமைச்சர் கயல்விழி தயாரா? இப்படியாக டி.என்.பி.எஸ்.சி அமைப்பில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கும் போது சமூகநீதிக்காக குரல் கொடுத்த டாக்டர் அன்புமணி ராமதாஸ் மீது குறை கூற அமைச்சர் கயல்விழி முயல்வது கண்டிக்கத்தக்கது.

அவருக்கு சமூகநீதியில் உண்மையாகவே அக்கறை இருந்தால் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு 3.5 லட்சம் காலியிடங்களை நிரப்புவதுடன், 2 லட்சம் பணியிடங்கள் புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், தி.மு.க. தலைமை காட்டும் இடங்களில் கையெழுத்திடும் பணியை மட்டும் செய்து கொண்டு அவர் அமைதி காக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# எதிராளிகளுடன் ரகசிய தொடர்பு: அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி கடும் எச்சரிக்கை



சென்னை, அக். 18

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கட்சியில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா, ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரை மீண்டும் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார்.

அதே நேரத்தில் எதிராளிகளுடன் ரகசிய தொடர்பில் இருப்பவர்களை கட்சியில் இருந்து நீக்கும் நடவடிக்கையிலும் அவர் அதிரடியாக இறங்கியுள்ளார். பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ள எடப்பாடி பழனிசாமி, அந்த கட்சியினரோடும் பா.ஜ,க, வுக்கு ஆதரவான அமைப்பினருடனும் தொடர்பில் இருப்பவர்களையும் கண்காணித்து வருகிறார்.

அந்த வகையில் குமரி மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் கட்சி பொறுப்புகளில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ். பேரணியை தொடங்கி வைத்ததற்காக அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. தொண்டர்களுக்கு எழுதியுள்ள மடலில் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் திருக்குறளை மேற்கோள் காட்டி அதிரடியான கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

"வான் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு" என்கிற திருக்குறளை கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எடப்பாடி பழனிசாமி, வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியது இல்லை. ஆனால் நண்பர்கள் போல இருந்து உட்பகை கொண்டவர்களின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும் என்று எத்தனை ஆழமான அறிவுரையை வள்ளுவ பேராசான் நமக்கு தந்திருக்கிறார். உட்பகை கொண்டவர்கள் இனி நம் இயக்கத்திற்கு வேண்டாம் என்பதில் உறுதியோடு நிற்போம் என விளக்கியுள்ளார்.

கட்சிக்கு வேண்டாதவர்களிடம் தொடர்பு வைத்துக் கொண்டு கட்சிக்குள்ளேயும் உள்பகை கொண்டு செயல்படுபவர்கள் யாராவது இருந்தாலும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்பதை தனது கடிதத்தின் மூலமாக எடப்பாடி பழனிசாமி வெளிப்படையாகவே தெரிவித்திருப்பதாக அ.தி.மு.க.வினர் கூறியுள்ளனர்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பின்னர் எடப்பாடி பழனிசாமி இது போன்ற அதிரடியான வார்த்தைகளை குறிப்பிட்டு கட்சியினருக்கு கடிதம் எழுதியது இல்லை.

அதேநேரத்தில் மாவட்ட அளவில் தலைமை தாங்கும் பொறுப்பில் இருந்த முன்னாள் அமைச்சர்கள் யாரையும் அதிடியாக நீக்கியதும் இல்லை. ஆனால் தற்போது கட்சி நிர்வாகிகளை களையெடுக்கும் விதத்தில் முதல் முறையாக எடப்பாடி பழனிசாமி அதிரடி காட்டியிருப்பது கட்சி நிர்வாகிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கிண்டி ரேஸ் கோர்ஸ் பகுதியில் முதலமைச்சர் ஆய்வு

சென்னை, அக். 18

சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

சென்னை கிண்டி ரேஸ் கோர்ஸ் பகுதியில் முதலமைச்சர் ஆய்வு செய்தார். ரேஸ் கோர்ஸ் நிலம் அரசின் வசம் வந்துள்ள நிலையில் அங்கு நடைபெறும் குளம் அமைக்கும் பணியை பார்வையிட்டார். நீர்நிலை மற்றும் பூங்கா அமைப்பதற்காக பள்ளம் தோண்டும் பணியையும் அவர் ஆய்வு செய்தார். மழை நீரை தேக்கி வைக்கும் அளவிற்கு மிகப் பெரிய அளவில் குளம் அமைக்குமாறு உயர்நீதி மன்றம் அறிவுறுத்தியதையடுத்து பணி தொடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆலந்தூர் மண்டலத்தில் ரூ.311.61 கோடி மதிப்பீட்டில் வெள்ளத்தடுப்பு பணிகள் நிறைவேற்றம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்



சென்னை, அக். 18

அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட மாதவபுரம், வ.உ.சி நகர், ஜீவன் நகர், வீராங்கல் ஓடை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியதாவது:

ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட அய்யப்பன் தாங்கல், பரணிபுத்தூர், மவுலிவாக்கம், கொளப்பாக்கம், முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகள் போரூர் ஏரியின் உபரிநீர் வெளியேற்றத்தால் பாதிக்கப்படுவதை தடுக்க ரூ.204.93 கோடி மதிப்பில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. வாய்க்கால்களின் மதகுகள் சீராக இயங்குமாறு தயார் நிலையில் வைத்திருக்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆதம்பாக்கம், பழவந்தாங்கல், வானுவம் பேட்டை, நங்கநல்லூர் வீராங்கல் ஓடையால் ஏற்படும் பாதிப்புகளை சரி செய்ய ரூ.13.80 கோடி மதிப்பில் அதன் கரைகளை பலப்படுத்துப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஓடையின் நீர்வரத்து தடைப்பட்டால் உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலந்தூர் மண்டலத்தில் ரூ.83 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகளையும், ரூ.9.88 கோடி மதிப்பீட்டில் கண்ணன் காலனி, ஆலந்தூர் மாதவரம் ஆகிய இடங்களில் கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆலந்தூர் மண்டலத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 13 அவசர கால குழுக்களும், சுமார் 2 ஆயிரம் பொதுமக்கள் தங்கும் வகையில் 13 நிவாரண முகாம்கள், 3 பொது சமையல் கூடங்கள், 52 மோட்டார் பம்புகள், 37 மரம் வெட்டும் எந்திரங்கள், 5 மண் நிரம்பும் எந்திரங்கள், 12 டிப்பர் லாரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திண்டுக்கல்லில் பூரான் கிடந்த வடையை சாப்பிட்ட சிறுவனுக்கு வாந்தி, மயக்கம்

வடமதுரை அக். 18

திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனியை சேர்ந்த பியூலா என்ற பெண் தனது 3 வயது மகனுடன் அதே பகுதியில் உள்ள பேக்கரியில் வடை சாப்பிட சென்றார். சிறுவனுக்கு வடையுடன் குருமா ஊற்றி கொடுத்துள்ளனர்.

பாதி வடையை சாப்பிட்ட பின்னர் அதில் பூரான் கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து தனது தாயிடம் தெரிவித்தான். அவர் கடைக்காரரிடம் வடையில் பூரான் கிடப்பதை காட்டி கேட்டார். ஆனால் அவர்கள் முறையான பதில் அளிக்காமல் அலட்சியமாக பேசியுள்ளனர்.

இந்த நிலையில் சிறுவனுக்கு திடீரென வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் நகரில் ஏராளமான சாலையோர கடைகள் உள்ளன. இதில் பெரும்பாலான கடைகளில் சுகாதாரம் என்பது துளியளவு கூட கிடையாது. தற்போது மழை பெய்து வருவதால் பூரான், பல்லி, பூச்சி உள்ளிட்ட விஷ சந்துகள் ஆங்காங்கே ஊர்ந்து வருகின்றது. பெரும்பாலான சாலையோர கடைகளில் உணவு பொருட்கள் தரையிலேயே வைக்கப்படுகின்றன. இதனால் பூச்சிகள் அதில் விழும் அபாயம் உள்ளது.

மேலும் தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால் இனிப்பு, காரம் உள்ளிட்டவை தயாரிக்கும் திடீர் கடைகளும் முளைத்து வருகின்றன. இதில் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கப்படுகிறதா? என தெரியவில்லை. இது போன்ற தரம் குறைந்த உணவுகளை உண்பதால் பொதுமக்களுக்கு வயிற்று போக்கு உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்பட்டு வருகின்றது.

எனவே திண்டுக்கல் நகரில் உள்ள ஓட்டல்களை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சோதனையிட்டு உணவின் தரத்தை உறுதி செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கனமழை அறிவிப்பால் பயணத்தை தவிர்த்த மக்கள்
# சென்னையில் இருந்து 50 சதவீத ஆம்னி பஸ்கள் இயக்கப்பட்டன

சென்னை, அக். 18

சென்னை மற்றும் சுற்றுப் பகுதிகளில் 2 நாட்களாக கன மழை பெய்து வருகிறது.

நேற்றும் இன்றும் மிக கனமழை எச்சரிக்கை கொடுக்கப்பட்டதால் வெளியூர் பயணத்தை மக்கள் தவிர்த்தனர். இதனால் பஸ்களில் கூட்டம் குறைந்து.



அரசு பஸ்கள் குறைந்த அளவிலான பயணிகளுடன் சென்றது. வார இறுதி நாட்கள் (வெள்ளி, சனி, ஞாயிறு) இல்லாத பிற நாட்களில் 800 அரசு விரைவு பஸ்கள் இயக்கப்படும். சென்னையில் இருந்து 300க்கும் மேற்பட்ட பஸ்கள் இக்கப்பட்டன.

ஆம்னி பஸ்களை பொறுத்தவரையில் 50 சதவீத பஸ்கள் இயக்கப்படவில்லை. வழக்கமாக சென்னையில் இருந்து 800 ஆம்னி பஸ்கள் பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படும்.

ஆனால் பயணிகள் இல்லாததால் 350 பஸ்கள் மட்டுமே இயக்கப்பட்டதாக ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் அன்பழகன் தெரிவித்தார். அதே போல வெளியூர்களில் இருந்தும் சென்னைக்கு நேற்று குறைந்த அளவில் தான் ஆம்னி பஸ்கள் வந்தன.

வழக்கமாக 330 ஆம்னி பஸ்கள் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் இருந்து புறப்பட்டு சென்னைக்கு வரும். நேற்று 200 பஸ்கள் மட்டுமே வந்தன.

சென்னை மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் கனமழை பெய்ததால் வெளியூர்களில் இருந்து சென்னைக்கு வருவதையும் ஒத்தி வைத்தனர். பலர் முன்பதிவு செய்த பயணத்தை ரத்து செய்தனர். அவசரமாக செல்ல வேண்டியவர்கள் மட்டுமே பஸ் பயணத்தை மேற்கொண்டனர்.

# மேட்டுப்பாளையம்குன்னூர் இடையே மலை ரெயில் பாதையில் உருவான நீர்வீழ்ச்சிகள்

மேட்டுப்பாளையம், அக். 18

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், கோவை, நீலகிரி மாவட்டங்களில் கடந்த 4 நாட்களுக்கும் மேலாக பலத்த மழை கொட்டி வருகிறது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் மழையின் தீவிரம் அதிகமாக உள்ளது. இதனால் மேட்டுப்பாளையம் குன்னூர் இடையே மலை ரெயில் தண்டவாளத்தில் மண் சரிவு மற்றும் பாறை, மண் ஆகியவை விழுந்து தண்டவாளங்கள் சேதமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நேற்று குன்னூர் இடையே உள்ள மரப்பாலம், பர்லியாறு, கே. என். ஆர், ஹில்குரோவ், அடர்லி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பெய்த கனமழையால் மலைரெயில் பாதையில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் ராட்சத அளவில் புதிய நீர்வீழ்ச்சிகள் உருவாகி உள்ளன.

அதில் இருந்து தண்ணீர் காட்டாற்று வெள்ளம் போல தண்டவாளத்தில் விழுந்து அந்த பகுதியே வெள்ளக்காடாக காட்சியளித்தது. மேட்டுப்பாளையம் ரெயில்வே பணிமனை ஊழியர்கள் மழை பெய்து கொண்டே இருந்ததால் தண்டவாளத்தில் மண் மற்றும் பாறைகள் சரிந்து விழுந்துள்ளனவா என ஆய்வு செய்ய சென்றனர்.

அப்போதுதான் இந்த நீர்வீழ்ச்சிகள் உருவாகி இருந்ததை கண்டனர். மேலும் சில இடங்களில் மண் சரிவும் ஏற்பட்டு இருந்தது. உடனடியாக அவர்கள் ரெயில்வே அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து ஏதேனும் பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சத்தில் இன்றும், நாளையும் என 2 நாட்கள் மேட்டுப்பாளையம் ஊட்டி மலைரெயில் ரத்து செய்யப்படுவதாக சேலம் கோட்ட ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. மலைரெயில் ரத்து செய்யப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மேட்டுப்பாளையம்பர்லியாறு இடையே முதல் கொண்டை ஊசி வளைவின் அருகே பழமை வாய்ந்த ராட்சத மரம் ஒன்று சாலையின் நடுவே முறிந்து விழுந்தது.

இதனால் மேட்டுப்பாளையத்தில் இருந்து வந்த வாகனங்களும், குன்னூரில் இருந்து வந்த வாகனங்களும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

இதுகுறித்து தகவலறிந்து வந்த மேட்டுப்பாளையம் தீயணைப்புத் துறையினர் மற்றும் வருவாய் துறையினர், போலீசார் சாலையில் விழுந்து கிடந்த ராட்சத மரத்தை 3 மணி நேரத்திற்கு மேலாக போராடி அகற்றினர்.

இதனால் மேட்டுப்பாளையம்குன்னூர் மலை பாதையில் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதேபோல் வண்டிச்சோலை, பெள்ளட்டி மட்டம், பாய்ஸ் கம்பெனி, வண்டிச்சோலை, மூன்றுரோடு உள்ளிட்ட பகுதிகளில் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதித்தது.

குன்னூர் தீயணைப்பு துறை நிலைய அலுவலர் குமார் மற்றும் தாசில்தார் கனி சுந்தரம் ஆகியோர் மேற்பார்வையில் மரங்கள் அகற்றப்பட்டது.

இன்று அதிகாலை குன்னூர் அருகே உள்ள பிளாக் பிரிட்ஜ்சப்ளை டிப்போ சாலையில் 3 மரங்கள் அடுத்தடுத்து மின் கம்பிகள் மீது விழுந்தது. இதனால்

மின்சாரத்துறையினர் விரைந்து வந்து மின்சாரத்தை துண்டித்தனர். தொடர்ந்து அங்கு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

# மழைநீர் எங்கும் தேங்காமல் இருப்பதே வெள்ளை அறிக்கை தான்: இபிஎஸ்க்கு உதயநிதி பதில்

சென்னை, அக். 18

சென்னையில் பெய்து வரும் மழையால் இடைவிடாது தொடர்ந்து பணியாற்றி வரும் மாநகராட்சி முன்கள பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று சிற்றுண்டி உள்ளிட்ட உதவிப் பொருட்களை வழங்கினார்.



சேப்பாக்கத்தில் உள்ள தொகுதி சட்டமன்ற அவலகத்துக்கு சென்ற உதயநிதி ஸ்டாலின் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் சாலை பணியாளர்களுக்கு இந்த நிவாரண பொருட்களை வழங்கினார். போர்வை, பிரட், பிஸ்கட், குடிநீர் பாட்டில்கள் ஆகியவற்றுடன் உதவித் தொகையையும் அவர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அவருடன் தயாநிதி மாறன் எம்.பி., மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன் மோகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சி முடிந்ததும் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின்பேரில் அனைத்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள் களத்தில் இறங்கி மக்களுக்கு மழையால் பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக அனைத்துவித முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இன்று இதுவரை லேசான மழைதான் பெய்து உள்ளது. இதற்கு பிறகு அதி கனமழை பெய்தாலும், அதையும் எதிர் கொள்வதற்கு தமிழக அரசு தயாராக உள்ளது.

பொதுமக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒத்துழைப்பு தந்ததற்கு. களத்தில் தொடர்ந்து பணியாற்றி வரும் தூய்மையாளர்கள் உள்ளிட்ட அனைத்து துறையினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை நீர் தடுப்பு பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று எதிர்க் கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கேட்டு உள்ளார். சென்னையில் மழை நீர் தேங்காமல் இருப்பதே வெள்ளை அறிக்கை தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் வெள்ள நீரை அகற்றும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் ராமதாஸ்

சென்னை, அக். 18

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று இரவு குறிப்பிடும்படியாக மழை பெய்யாததாலும், மாநகராட்சி சார்பில் மழை நீரை வெளியேற்றும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதாலும் சென்னை மாநகரின் முதன்மைச் சாலைகளில் நேற்று பகலில் தேங்கியிருந்த மழை நீர் வடிந்திருக்கிறது. அதனால் போக்குவரத்து ஒருபுறம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில், பொதுமக்களும் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளனர்.

அதேநேரத்தில் சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் உட்புறச்சாலைகளிலும், தாழ்வான பகுதிகளிலும் தேங்கியுள்ள மழை நீர் இன்னும் வெளியேற்றப்படவில்லை. அதற்கான பணிகளை தீவிரப்படுத்தி அந்த பகுதிகளிலும் இயல்பு நிலையைத் திரும்பச் செய்வதற்கு சென்னை மாநகராட்சியும், தமிழக அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சென்னையில் தேங்கிய மழைநீரை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததையும், அதிக எண்ணிக்கையிலான நீர் இறைப்பான்கள் கொண்டு வரப்பட்டு தேங்கிக் கிடந்த தண்ணீர் வெளியேற்றப்பட்டதையும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் மழை நீர் தேங்காமல் தடுப்பதில் சென்னை மாநகராட்சியும், தமிழக அரசும் தோல்வியடைந்து விட்டன. திருப்புகழ் குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தவாறு மழை நீர் வடிகால்கள் முழுமையாக அமைக்கப்பட்டிருந்தால் சென்னையில் எந்தப் பகுதியிலும் மழை நீர் தேங்காமல் தடுத்திருக்க முடியும்.

சென்னையில் இந்த முறை எதிர்பார்த்ததை விட குறைவாகவே மழை பெய்திருக்கிறது. இன்னும் இரு மாதங்கள் நீடிக்கக்கூடிய வடகிழக்கு பருவமழைக் காலத்தில் எதிர்பார்ப்பை விட அதிக மழை பெய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளன. அத்தகைய சூழல் ஏற்பட்டால் அதை சமாளிக்கும் வகையில் சென்னையில் இன்னும் முடிக்கப்படாத மழை நீர் வடிகால்கள் உள்ளிட்ட வெள்ளத்தடுப்புப் பணிகளை தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு முடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# நடிகை துஷாராவின் பிறந்தநாளையொட்டி `வீர தீர சூரன்' படக்குழு வெளியிட்ட சிறப்பு போஸ்டர்

இரட்டை மூக்குத்தி, கிராமத்து அடாவடியாக 'சார்பட்டா' படத்தில் ஆர்யாவுக்கு நிகராக, கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுத்து நடித்தவர் துஷாரா விஜயன். அந்தப் படம் வெளியான சமயம், 'மாரியம்மா... மாரியம்மா...' என்று செல்லும் இடமெல்லாம் அன்புடன் அழைக்கப்பட்ட அழகிய நாயகி.

தமிழில் தனுஷ், ஆர்யா, ரஜினிகாந்த் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ள துஷாரா விஜயன், நடிப்பில் சமீபத்தில் அடுத்தடுத்து ராயன் மற்றும் வேட்டையன் படங்கள் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றுக் கொடுத்துள்ளன.

சேதுபதி, சித்தா படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் தனது 62 வது படமான 'வீர தீர சூரன்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு 'வீர தீர சூரன்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக விக்ரமின் பிறந்த நாள் அன்று படக்குழு டீசர் வெளியிட்டு அறிவித்தது. மேலும், தற்போது இரண்டாவது பாகத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படத்தின் வெளியீட்டிற்குப் பிறகு, படத்தின் முதல் பாகம் உருவாகும் என படக்குழு தெரிவித்துள்ளது. அந்த வகையில், வீர தீர சூரன் இரண்டு பாகங்களாக உருவாக உள்ளதை படக்குழு உறுதி செய்துள்ளது.

நடிகை துஷாராவின் பிறந்தநாளையொட்டி `வீர தீர சூரன்' படக்குழு சிறப்பு போஸ்டரை வெளியிட்டுள்ளது.

வேட்டையன் படக்குழு சார்பில் லைகா நிறுவனம் அவருக்கு எக்ஸ் தள பக்கத்தில் பிறந்தநாள் வாழ்த்துகளை பகிர்ந்து வீடியோ வெளியிட்டுள்ளது.

# 'ராக்கெட் டிரைவர்' படத்தின் ஸ்னீக் பீக் வீடியோ வெளியீடு





ஸ்டோரீஸ் பை தி ஷோர் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் அனிருத் வல்லப் தயாரிக்கும் புதிய படம் "ராக்கெட் டிரைவர்". இந்த படத்தை அறிமுக இயக்குனர் ஸ்ரீராம் அனந்த சங்கர் இயக்குகிறார். பேண்டசி, டிராமா காமெடி என்டர்டெயினர் கதையம்சம் கொண்ட படமாக "ராக்கெட் டிரைவர்" உருவாகிறது. இந்த படத்தில் விஷ்வந்த் முதன்மை பாத்திரத்தில் நடிக்கிறார்.

தான் செய்த தவறுகளால், தனது வாழ்க்கை ஏமாற்றம் நிறைந்த ஒன்று என புலம்பி வரும் ஆட்டோ ஓட்டுநர், உலகையே மாற்ற வேண்டும் என்ற கனவு கொண்டிருக்கிறார்.எனினும், இது தொடர்பாக அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. இந்த நிலையில், தனது ரோல் மாடலை அவரது 17வயதில் காண்கிறார். அப்போது அரங்கேறும் விசித்திர சம்பவம் விபரீதத்தில் முடிகிறது. இதைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்களே இப்படத்தின் கதை.

அறிமுக நாயகன் விஷ்வந்த் முன்னணி வேடத்தில் நடிக்கும் இந்த படத்தில் தேசிய விருது வென்ற நாக விஷால், காத்தாடி ராமமூர்த்தி, சுனைனா, ஜெகன் மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு கவுஷிக் கிரிஷ் இசையமைக்கிறார்.

இப்படம் வருகிற 18ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இப்படத்தின் ஸ்னீக் பீக் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. இது குறித்த பதிவை தயாரிப்பு நிறுவனம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது.

# 'இன்னும் 50 நாட்கள்' வைரலாகும் 'புஷ்பா 2' திரைப்படத்தின் போஸ்டர்




அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய அளவில் ஹிட் அடித்த படம் புஷ்பா தி ரைஸ் . இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா, சுனில், பகத் பாசில் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்த இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்திருந்தார். இந்த படம் அனைத்து மொழி ரசிகர்களிடமும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த இப்படத்தின் வெற்றியைத்தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகி வருகிறது. சமீபத்தில் 'புஷ்பா 2 தி ரூல்' படத்தின் டீசரும் அதனைத் தொடர்ந்து படத்தின் பாடல்களில் லிரிக் வீடியோவும் வெளியாகி வைரலாகின. இப்படம் கடந்த செப்டம்பர் 15ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் படப்பிடிப்பில் சில தாமதங்கள் ஏற்பட்டதால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப்போனது. பின்னர், 'புஷ்பா 2 தி ரூல்' படம் வருகிற டிசம்பர் 6ந் தேதி வெளியாகும் என அதிகாரபூர்வ ரிலீஸ் தேதியை அறிவித்தனர். அதன்படி, இப்படம் வெளியாக இன்னும் சரியாக 50 நாட்கள் உள்ளன. இதனையடுத்து, படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், 'இன்னும் 50 நாட்கள்' என்று பதிவிட்டும் உள்ளனர். இதனையடுத்து இந்த போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

# பந்துவீச்சில் மிரட்டிய நியூசிலாந்து அணி...46 ரன்களுக்கு சுருண்டது இந்தியா




இந்தியாவுக்கு வந்துள்ள டாம் லாதம் தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகிறது. இதன்படி இந்தியா நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்குவதாக இருந்தது. ஆனால் நேற்று அங்கு கன மழை பெய்தது. இதனால் முதல் நாள் ஆட்டம் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இந்த நிலையில், இன்று 2வது நாள் ஆட்டம் தொடங்கி உள்ளது. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது . அதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பேட்டிங்கை தேர்வு செய்தார் அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது .

தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா,ஜெய்ஸ்வால் களமிறங்கினர் . தொடக்கத்தில் ரோகித் சர்மா 2 ரன்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார் . பின்னர் வந்த சர்பராஸ் கானும் ரன் எதுவும் எடுக்காமல் வெளியேறினார்.

தொடர்ந்து ஜெய்ஸ்வால் , ரிஷப் பண்ட் ஆகியோர் சற்று நிலைத்து ஆடினர் , ஆனாலும் ஜெய்ஸ்வால் 13 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து வந்த கே எல் ராகுல் , ஜடேஜா, அஸ்வின் ஆகியோர் அடுத்தடுத்து டக் அவுட் ஆகி வெளியேறினர். மறுபுறம் சிறிது நேரம் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரிஷப் பண்ட் 20 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார் .

இறுதியில் இந்திய அணி 31.2 ஓவர்களில் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. நியூசிலாந்து சார்பில் சிறப்பாக பந்துவீசி மேத் ஹென்றி 5 விக்கெட், வில்லியம் ஓரூர்க் 4 விக்கெட் , சவுதி ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

# பெங்களூரு டெஸ்ட்: 4 வீரர்கள் டக் அவுட்...இந்திய அணி தடுமாற்றம்




இந்தியாவுக்கு வந்துள்ள டாம் லாதம் தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகிறது. இதன்படி இந்தியா நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்குவதாக இருந்தது. ஆனால் நேற்று அங்கு கன மழை பெய்தது. இதனால் முதல் நாள் ஆட்டம் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.இந்த நிலையில், இன்று 2வது நாள் ஆட்டம் தொடங்கி உள்ளது. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது . அதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பேட்டிங்கை தேர்வு செய்தார் . அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது . தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா,ஜெய்ஸ்வால் களமிறங்கினர் . தொடக்கத்தில் ரோகித் சர்மா 2 ரன்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார் . பின்னர் வந்த சர்பராஸ் கானும் ரன் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். தொடர்ந்து ஜெய்ஸ்வால் , ரிஷப் பண்ட் ஆகியோர் சற்று நிலைத்து ஆடினர் , ஆனாலும் ஜெய்ஸ்வால் 13 ரன்களில் ஆட்டமிழந்தார் . இதனை தொடர்ந்து வந்த கே எல் ராகுல் , ஜடேஜா ஆகியோர் அடுத்தடுத்து டக் அவுட் ஆகி வெளியேறினர் .,இதனால் இந்திய அணி 2வது நாள் உணவு இடைவேளை வரை 6 விக்கெட் இழப்பிற்கு 34 ரன்கள் எடுத்து தடுமாறி வருகிறது .

# 12 அணிகள் பங்கேற்கும் புரோ கபடி லீக் இன்று தொடக்கம்



11வது புரோ கபடி லீக் போட்டி ஐதராபாத்தில் நாளை (18 ந் தேதி) தொடங்குகிறது. டிசம்பர் 29ந் தேதி வரை இந்தப் போட்டி நடக்கிறது.2வது கட்ட ஆட்டங்கள் நொய்டாவிலும், 3வது கட்ட போட்டிகள் புனேயிலும் நடக்கிறது. புரோ கபடி லீக் போட்டியில் புனேரி பல்தான், முன்னாள் சாம்பியன்கள் பாட்னா பைரேட்ஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ், யு மும்பா, பெங்களூரு புல்ஸ், பெங்கால் வாரியர்ஸ், தபாங் டெல்லி மற்றும் தமிழ் தலைவாஸ், அரியானா ஸ்டீலர்ஸ், உ.பி. யோத்தாஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், தெலுங்கு டைட்டன்ஸ் ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் 22 ஆட்டத்தில் விளையாட வேண்டும். லீக்முடிவில்புள்ளிகள்அடிப்படையில்முதல்6இடங்களை பிடிக்கும் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறும்.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டங்களில் தெலுங்கு டைட்டன்ஸ்பெங்களூரு புல்ஸ் (இரவு 8 மணி ), டெல்லி மும்பை ( இரவு 9 மணி ) அணிகள் மோதுகின்றன.

தமிழ் தலைவாஸ் அணி தொடக்க ஆட்டத்தில் தெலுங்கு டைட்டன்ஸ் அணியை நாளை மறுநாள் எதிர்கொள்கிறது. இரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் நடக்கிறது.இந்த போட்டிகள் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.